**கதிர்காமம் பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

கதிர்காமம் பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவுடன் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் (சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டியதென கருதப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கை குறிப்பிடப்பட்டுள்ளன.

.

கதிர்காமம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயமொன்றை வெளியிடவில்லை. இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கு எனக்கு முடியாதிருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது மறுப்பு அபிப்பிராயமொன்று வழங்கப்படுகின்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 <u>ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை</u>

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 3,806,906 பெறுமதியான 04 நிர்மாணங்களின் பெறுமதி காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் பதிவு செய்வேன். | சபையிடம் உள்ள அனைத்து சொத்துக்களின் பெறுமதி இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 951,737 ஆன 15 உபகரணங்கள் அலகுகளின் பெறுமதி ஆதனங்கள் பொறிகள் உபகரணங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது ஆதனங்கள் கொறிகள் உபகரணங்களின் கீழ் பதிவு செய்வேன். | சபையிடம் உள்ள அனைத்து சொத்துக்களின் பெறுமதி இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 1,501,703 ஆக இருந்த போதும் நிதி நிலைமைக் தொடர்பான கூற்றில் ரூபா 2,091,871 என ரூபா 590,168 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை நாளதுவரை யாக்குமாறு விடய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சரியான பெறுமதிகளை நிதிக கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நீதிமன்ற தண்டப் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 2,190,158 மற்றும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 1,721,496 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டிலிருந்து பதிவேடுகளை ளையும் ஆவணங்களையும் மாதாந்தம் ஒப்பீடு செய்து தயாரித்து தயாரித்து சமர்ப்பிப்பதாக | சபைக்குரிய அனைத்து வருமானங்களையும் சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் வீதவரி வருமானம் ரூபா 6,263,051 ஆக இருந்த போதும் | எதிர்காலத்தில் இதனை சீராக்கவும் வருமான | சபைக்குரிய அனைத்து |

| | | | |
|---|---|---|---|
| | அது நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 2,241,631 என ரூபா 4,021,420 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பதிவேடுகளை நாளதுவரை யாக்குமாறு விடய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வருமானங்களையும் சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை பொதுச் சந்தை வாடகை பெறுமதி ரூபா 13,967,867 ஆக இருந்த போதும் அது நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ரூபா 10,037,825 என ரூபா 3,930,042 குறைத்துக், கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | எதிர்காலத்தில் இதனை சீராக்கவும் வருமான பதிவேடுகளை சரியாக நாளது வரையாக்குவதற்கு விடய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | சபைக்குரிய அனைத்து வருமானங்களையும் சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கி கூற்றில் உள்ளடக்கப்பட்ட ரூபா 297,417 ஆன இனங்காணப்படாத பெறுவனவுகள் மற்றும் ரூபா 23,509 ஆன நிறுத்தி வைத்தல் வரியை மீளளிப்பதற்குரிய சீராக்கங்களை நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | இத்தவறினை விரைவில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | இனங்காணப்படாத பெறுவனவுகளை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப் பட்டிருந்த செலவின கடன் கொடுத்தோர் அட்டவணையின் பிரகாரம் செலவின கடன்கொடுத்தோர் ரூபா 1,707,970 ஆக இருந்த போதும் அது நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ரூபா 130,157 என ரூபா 1,577,813 ஆன வேறுபாடு இருந்தது | விரைவில் கடன்கொடுத்தோர் பதிவேடுகளை நாளது வரையாக்குவதற்கு விடய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் பதிவேடுகள் இணக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப் பட்டிருந்த முற்கொடுப்பனவு பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய முற் கொடுப்பனவு மீதி ரூபா 47,039 ஆக இருந்த போதும் அது நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ரூபா 182,566 என ரூபா 135,527 ஆன வேறுபாடு இருந்தது | முற்கொடுப்பனவு பதிவேட்டை நாளது வரையாக்குவதற்கு விடய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் பதிவேடுகள் இணக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | நிதிக் கூற்றுக்களில் கணக்கீட்டுக் | 2024 ஆம் ஆண்டின் நிதிக் | அட்டுறு |

| | | | |
|---|---|---|---|
| | கொள்கையாக அட்டுறு அடிப்படையில் கணக்குகள் வைக்கப்படுவதாக வெளிப்படுத்தப் பட்டிருந்த போதும் வருமானங்கள் கணக்கீடு செய்யப்பபட்டிருந்தன. | கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அட்டுறு அடிப்படையில் வருமானங்கள் செலவினங்களை கணக்கீடு செய்வதாக | அடிப்படையில் கணக்குகள் கணக்கீடு தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஔ) | சபையினால் வெளித் தரப்பினருக்கு எதிராக தொடரப்பட்டிருந்த 15 வழக்குகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது வெளிப்படுத்தப்படு வதாக | நிதிக் கூற்றுக்களில் உரிய வெளிப்படுத்தல்கள் செய்யப்பட வேண்டும். |
| (க) | 2020 ஆம் 2021 ஆண்டுகளில் உடைத்து அகற்றப்பட்ட ரூபா 490,000 பெறுமதியான 9 கட்டிடங்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (கா) | மீளாய்வண்டின் வாகன நிறுத்துமிட வரி வருமானத்திற்குரிய பட்டியலிடல் ரூபா 24,399,228 ஆக இருந்த போதும் அது ரூபா 3,140,301 என ரூபா 21,258,927 தொகை நிதிச் செயலாற்றல் தொடர்பான கூற்றில் காட்டப்பட்டிருந்தது | எதிர்காலத்தில் இத்தவறினை திருத்துவதற்கும் வருமான பதிவேடுகளை நாளது வரையாக்குவதற்கும் விடய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | சபைக்கு சொந்தமான அனைத்து வருமானங்களையும் சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (கி) | சபையினால் சமர்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வாகன நிறுத்துமிட வரி வருமானத்திற்குரிய பட்டியலிடல் ரூபா 22,953,719 ஆக இருந்த போதும் அது ரூபா 17,479,225 என ரூபா 5,474,494 குறைத்து நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இத்தவறினை திருத்துவதற்கும் வருமான பதிவேடுகளை நாளது வரையாக்குவதற்கும் விடய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | சபைக்கு சொந்தமான அனைத்து வருமானங்களையும் சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (கீ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வாரச் சந்தைகளை குத்தகைக்கு வழங்குவதற்குரிய | எதிர்காலத்தில் இத்தவறினை திருத்துவதற்கும் வருமான பதிவேடுகளை நாளது | சபைக்கு சொந்தமான அனைத்து |

| | | | |
|---|---|---|---|
| | பட்டியல்களின் பிரகாரம் மீதி ரூபா 3,379,020 ஆக இருந்த போதும் அது ரூபா 2,123,170 என ரூபா 1,255,850 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | வரையாக்குவதற்கும் விடய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | வருமானங்களையும் சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (கு) | சபையினால் சமர்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வாரச் சந்தை வரி வருமானம் ரூபா 1,303,252 ஆக இருந்த போதும் அது ரூபா (454,595) என பற்றாக்குறையாக ரூபா 1,757,847 குறைத்து நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இத்தவறினை திருத்துவதற்கும் வருமான பதிவேடுகளை நாளது வரையாக்குவதற்கும் விடய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | சபைக்கு சொந்தமான அனைத்து வருமானங்களையும் சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (கூ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது மலசலகூடங்கள் குத்தகைக்கு வழங்குவதற்குரிய பட்டியல்களின் பிரகாரம் மீதி ரூபா 3,451,350 ஆக இருந்த போதும் அது ரூபா 4,567,924 என ரூபா 1,116,574 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | எதிர்காலத்தில் இத்தவறினை திருத்துவதற்கும் வருமான பதிவேடுகளை நாளது வரையாக்குவதற்கும் விடய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | சபைக்கு சொந்தமான அனைத்து வருமானங்களையும் சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (கெ) | மீளாய்வாண்டின் கந்த சுரிதுகம கடை அறைகளை குத்தகைக்கு வழங்குவதற்குரிய பட்டியலிடல் மீதி ˙ ரூபா 154,800 ஆக இருந்த போதும் அது ரூபா 26,200 என ரூபா 128,600 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | எதிர்காலத்தில் இத்தவறினை திருத்துவதற்கும் வருமான பதிவேடுகளை நாளது வரையாக்குவதற்கும் விடய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | சபைக்கு சொந்தமான அனைத்து வருமானங்களையும் சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (கே) | மீளாய்வாண்டின் கந்த அப்பம் கடை, பூக் கடை, பொதுச் சந்தைக் கடை மற்றும் வாகன நிறுத்துமிடகடைகளை குத்தகைக்கு வழங்குவதற்குரிய பட்டியலிடல் மீதி ˙ ரூபா 4,694,400 ஆக இருந்த போதும் அது ரூபா 514,100 என ரூபா 4,180,300 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | எதிர்காலத்தில் இத்தவறினை திருத்துவதற்கும் வருமான பதிவேடுகளை நாளது வரையாக்குவதற்கும் விடய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | சபைக்கு சொந்தமான அனைத்து வருமானங்களையும் சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கை) | மீளாய்வாண்டில் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 81,700 ஆன உபகரணங்களின் பெறுமதி ரூ ஆதனங்கள் பொறிகள் உபகரணங்களின் கீழ் மூலதனமாக் கப்பட்டிருக்கவில்லை | 2024 ஆம் ஆண்டின் போது ஆதனங்கள் பொறிகள் உபகரணங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டுள்ளதாக | சபைக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களையும் சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6.2 <u>இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்</u>**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீத வரி மென்பொருள் முறைமையின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய வீதவரி மீதி ரூபா 18,273,583 ஆக இருந்த போதும் அது நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ரூபா 14,649,036 என ரூபா 3,624,547 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது | எதிர்காலத்தில் இத்தவறினை திருத்துவதற்கும் வருமான பதிவேடுகளை நாளது வரையாக்குவதற்கும் விடய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | சபைக்கு சொந்தமான அனைத்து வருமானங்களையும் சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | முத்திரை கட்டணங்கள் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் முத்திரை கட்டண பட்டியலிடல் ரூபா 1,391,833 ஆக காணப்பட்ட போதும் நிதிச் செயலாற்றல் தொடர்பான கூற்றில் அது ரூபா 2,105,870 என ரூபா 714,037 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது | எதிர்காலத்தில் இத்தவறினை திருத்துவதற்கும் வருமான பதிவேடுகளை சரியாக நாளது வரையாக்குவதற்கும் விடய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் பதிவேடுகள் இணங்குதல் வேண்டும். |
| (இ) | முத்திரை கட்டணங்கள் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரை கட்டண வருமானம் ரூபா 2,075,199 ஆக காணப்பட்ட போதும் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் அது ரூபா 4,321,365 என ரூபா 2,246,166 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது | எதிர்காலத்தில் இத்தவறினை திருத்துவதற்கும் வருமான பதிவேடுகளை சரியாக நாளது வரையாக்குவதற்கும் விடய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் பதிவேடுகள் இணங்குதல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா 410,443,659 பெறுமதியான 15 சொத்து விடயங்கள் மற்றும் 08 பொறுப்பு விடயங்களுக்குரிய உரித்துறுதிகள், மதிப்பீட்டு அறிக்கைகள், நிலையான சொத்துக்கள் பதிவேடு, அட்டவணைகள், நாளதுவரை யாக்கப்பட்ட இருப்பு பதிவேடுகள், மெய்மையாய்வு அறிக்கைகள், நாளதுவரையாக்கப்பட்ட நிலுவை வருமான பதிவேடுகள், நாளதுவரை யாக்கப்பட்ட கடன்கொடுத்தோர் பதிவேடு, நாளதுவரையாக்கப்பட்ட வைப்புக்கள் பதிவேடு என்பன சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரட்சிக்க முடியாதிருந்தது. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை முறையாக மதிப்பீடு செய்வதற்கும் நிலையான சொத்துக்கள் உட்பட ஏனைனய அட்டவணைகளை விரைவில் சரியாக நாளதுவரையாக்குவ தற்கும் விடய உத்தியோகத்தர்களு க்கு அறிவிக்கப்பட்டுள்ள து | நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்ட கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் 24(1) (அ) ஆம் பிரிவு | சபையால் நுடாத்திச் செல்லப்படுகின்ற வீதிகள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 319 வீதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்க வில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது வீதிகளை வர்த்தமானியில் வெளியடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வீதிகள் பதிவேடுகளை நாளது வரையாக்கி வர்த்தமானியில் வெளியிட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 104(4) | பிரதேச சபைக்கு சொந்தமான குரு கெப் வண்டி 2022 மார்ச் 30 ஆம் திகதி விபத்துக்கு உட்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பூரண அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | ஆரம்ப அறிக்கை உதவி உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள் ளதுடன் அங்கீகாரம் கிடைத்த பின்னர் முழுமையான அறிக்கை பெற்றுக்கொள்வதாக | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 396 | ரூபா 157,056 கூட்டுப் பெறுமதியான 17 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு எடுக்கவில்லை. | குறித்த தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுட ன் பதில் கிடைக்கா விட்டால் அரசின் வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுப்பதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | 13 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 83(1) | 2017 ஆம் ஆண்டு முதல் 2019 காலப் பகுதியில் அங்கீகரிக்கப் பட்டிருந்த 235 கட்டிட திட்டங்களில் 225 திட்டங்களைப் பரீட்சித்து | இணக்கச் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளுமாறு உரிய தரப்பினருக்கு அறிவூட்டியுள்ளதாக வதற்காக உரிய நபர்களுக்கு | சபை அதிகாரப் பிரதேசத்தில் கட்டிடங்களை நிர்மாணிப்பது தொடர்பில் ஒழுங்குபடுத்துதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் பிரிவு | இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்க வில்லை | அறிவிப்புக்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளதுடன் சில கட்டிடங்களுக்காக இப்போதே இணக்கச் சான்றிதழ்கள் பெற்றுக் கொண்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அங்கீகரிக்கப்படும் கட்டிடதிட்டங்களுக்காக இணக்கச் சான்றிதழ் பெற்றுக் கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ள து | வேண்டும். |
| (உ) | 1993 நவம்பர் 18 ஆந் திகதிய 15 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைப் தலைவரின திட்டமிடல் சுற்றறிக்கை | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்காமையால் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் கிடைத்த பணம் பிரதேச சபையால் நடாத்திச் செல்லும் கணக்கில் நிறுத்தி வைத்து செலவினம் மேற்கொண்டமை காரணமாக அப்பணத்தை வேறு செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தும் அவதானமொன்று காணப்படுவது அவதானிக்கப்பட்டது. | சுற்றறிக்கைக்கு இணங்க வேறொரு கணக்கை ஆரம்பிப்பதற்கு விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2002 பெப்ரவரி 25 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க பெது நிர்வாக கூற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 07 வாகனங்களில் அரச இலட்சிணை மற்றும் நிறுவகத்தின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கவில் | விரைவில் வாகனங்களில் அரச இலட்சிணை மற்றும் நிறுவனத்தின் பெயர் பொறிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | மின்சக்தி மற்றம் எரிசக்தி அமைச்சு செயலாளரின் | வீதிகளுக்கு வெளிச்சமூட்டுதல் தொடர்பாக இலங்கை மின்சார சபையுடன் | எதிர்காலத்தில் இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய கூற்றறிக்கை | உடன்படிக்கை செய்யப்பட்டிருக்க வில்லை | செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வேண்டும். |
| (ஏ) | 2020 ஒக்தோபர் 02 ஆந் திகதிய 05/2020 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | 05 வாகனங்கள் 06 மாதங்கள் முதல் 03 ஆண்டு காலமாக திருத்தம் செய்யப்படாமல் விளைவற்று காணப்பட்டன. | இவ்வாகனங்களை எதிர்காலத்தில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,944,418 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,925,420 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபை செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 9,216,382 | 6,263,052 | 2,272,834 | 3,900,088 | 9,210,807 | 6,263,051 | 1,582,320 | 4,590,865 |
| (ii) | வாடகை | 18,374,300 | 3,208,680 | 338,800 | 2,869,880 | 18,263,500 | 4,539,000 | 557,475 | 3,980,025 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 2,230,500 | 1,560,650 | 1,560,650 | - | 2,230,500 | 841,350 | 841,350 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 19,319,125 | 10,298,988 | 10,298,988 | - | 19,214,125 | 14,682,743 | 14,682,743 | - |
| | | 49,140,307 | 21,331,370 | 14,471,272 | 6,769,968 | 48,918,932 | 26,326,144 | 17,663,888 | 8,570,890 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | **வீதவரி மற்றும் வரி** | | |
| (அ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப் பட்டிருந்த ரூபா 6,263,052 ஆன மொத்த வீதவரி வருமானத்தில் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 3,990,217 தொகை அதாவது 64 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பட்டியலிடப்பட்ட வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 17,987,143 ஆன நிலுவை வருமானத்தில் ஆண்டில் ரூபா 14,283,366 அல்லது 79 சதவீதம் அளவில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிலுவை வீத வரியை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வீத வருமானத்தை அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப் பட்டிருந்த ரூபா 19,824,598 ஆன கேள்வி ஆதனங்கள் குத்தகை வருமானத்திலிருந்து ரூபா 13,588,823 அதாவது 69 சதவீதம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பட்டியலிடப்பட்ட வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 15,641,245 ஆன நிலுவை கேள்வி ஆதனங்கள் குத்தகை வருமானத்திலிருந்து ஆண்டில் ரூபா 15,608,425 அல்லது 99 சதவீதம் அளவில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 15 குத்தகையாளர்களுக்கு எதிராக வழக்கு தொடரப் பட்டுள்ளதுடன் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவீடு செய்தல் வேண்டும். |
| | <u>வாடகை</u> | | |
| (அ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப் பட்டிருந்த ரூபா 5,366,667 ஆன கடை வாடகை வருமானத் திலிருந்து 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 4,918,567 அதாவது 92 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பட்டியிடப்பட்ட வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 11,293,025 ஆன நிலுவை கடை வருமானத்திலிருந்து ரூபா 9,615,415 அல்லது 85 சதவீதம் அளவில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடையுடன் கூடிய கடை உரிமையாளர்களுக்கு எதிராக ஆரம்ப சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவீடு செய்தல் வேண்டும். |

**ஏனைய வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| (அ) | அதிகார பிரதேசத்தில் 24 நிறுவனங்களால் காட்சிப்படுத்தப்பட்டிருந்த விளம்பர பதாகைகளுக்காக மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்கும் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,002,650 தொகை 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை | நிலையான வருமானத்தை விரைவில் செலுத்துமாறு உரிய தரப்பினர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளதாக | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் மோட்டர் கேடர் இயந்திர வாடகைக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 95,000 நிலுவையாக காணப்பட்டது. | குறித்த நிறுவனங்களை அறிவூட்டி நிலுவை வாடகை பணத்தை விரைவில் அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக | பட்டியலிடப்பட்ட வருமானத்தை விரைவில் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2020 2023 காலப்பகுதிக்குரிய அறவிடப்பட வேண்டிய தொலைபேசி கோபுர கட்டண வருமானம் ரூபா 60,000 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த தரப்பினருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் விரைவில் நிலுவை தொகையை அறவிடுவதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுதல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 289,497 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 1,796,925 தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களை அறவிடுவதற்கு உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுதல் வேண்டும். |

| **கணக்காய்வு அவதானிப்பு3. <u>செயற்பாட்டு மீளாய்வு</u>** | | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| **3.1** | **<u>முகாமைத்துவ செயற்திறனின்மை</u>** | | |
| | ------------------------------------------------------- | ------------------------------------ | --------------- |
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் 04 ஊழியர்களுக்காக 2001 சனவரி முதல் 2016 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புத் தொகை உரிய திகதியல் கொடுப்பனவு செய்யாமை காரணமாக ரூபா 247,950 ஆன மிகை அறவீடொன்றும் அக் காலப்பகுதிக்காக ஊழியரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 08 சதவீத பங்களிப்பு தொகையான ரூபா 198,360 தொகை சபை நிதியத்திலி ருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 54627 ஆம் இலக்க வழக்கு தீர்ப்பின் பிரகாரம் மிகை கொடுப்பனவு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாக | பொறுப்பான தரப்பினர் இனங்காணப்பட்டு மிகை அறவீட்டினை அறவீடு செய்ய வேண்டும் |
| (ஆ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 2016 மே முதல் 2022 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய 03 சதவீத பங்களிப்பு தொகை செலுத்தாமை காரணமாக ரூபா 380,710 ஆன மிகை அறவீடொன்று சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சபையின் முகாமைத்துவ கடிதத்தின் பிரகாரம் இத்தொகை கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாக | பொறுப்பான தரப்பினர் இனங் காணப்பட்டு மிகை அறவீட்டினை அறவீடு செய்ய வேண்டும் |
| (இ) | 2019 – 2021 ஆம் ஆண்டுகளில் அலுவலகமல்லாத நபர்களுக்காக ரூபா 55,000 பெறுமதியான 10 அடியிதழ் சேர் புத்தகங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2024 மே 08 ஆந் திகதி வரை சபைக்கு பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை. | அத்தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய தரப்பினரிடமிருந்து அடியிதழ் சேர் புத்தகங்களையும் பணத்தையும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | குறித்த பணத்தையோ அடியிதழ் சேர் புத்தகங்களையோ பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2018 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த 200 பிளாஸ்டிக் கத்ரைகளும் 50 உணவு மேசை கதிரைகளும் பௌதீக பரிசோதனையின் போது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | விரைவில் புலனாய்வொன்றை ஆரம்பித்து பொறுப்பான தரப்பினரிடமிருந்து உரிய பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பொறுப்பான தரப்பினர் இனங் காணப்பட்டு உரிய நட்டங்களை அறவீடு செய்ய வேண்டும். |
| (உ) | 2021 சனவரி மாதத்தின் போது நன்கொடையாக கிடைத்திருந்த 10 பிளாஸ்ரிக் தாங்கிகள் பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்படா திருந்ததுடன் பௌதீக ரீதியாக காணப்படவில்லை. | விரைவில் புலனாய்வொன்றை ஆரம்பித்து பொறுப்பான தரப்பினரிடமிருந்து உரிய பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பொறுப்பான தரப்பினர் இனங் காணப்பட்டு உரிய நட்டங்களை அறவீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | ஓய்வுமுண்டபத்திற்காக 2019 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 28,000 ஆன உணவு மேசை காணாமல் போயிருந்ததுடன் அது தொடர்பாக எவ்வித பரிசோதனையொன்றும் மேற்கொள்ளப்படவில்லை. | விரைவில் புலனாய்வொன்றை ஆரம்பித்து பொறுப்பான தரப்பினரிடமிருந்து உரிய பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பொறுப்பான தரப்பினர் இனங் காணப்பட்டு உரிய நட்டங்களை அறவீடு செய்ய வேண்டும். |
| (எ) | 2023 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்வில் குறைப்பயன்பாட்டு பொருட்களாக இனங்காணப்பட்டிருந்த பெறுமதி இனங்காண முடியாத 65 வகைகளுக்குரிய 1146 பொருட்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறை பயன்பாட்டு பொருட்கள் தொடர்பாக அதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் இனங் காணப்பட்டுள்ளதுடன் மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பொறுப்பான தரப்பினர் இனங் காணப்பட்டு உரிய நட்டங்களை அறவீடு செய்ய வேண்டும். |
| (ஏ) | சபைக்கரிய 55 காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் உரித்து சபைக்கு கையேற்று தொழில்சார் மதிப்பீடு செய்யப்பட்டு பெறுமதி கணக்கீடு செய்யப்படுவதாக | சபைக்குச் சொந்தமான அனைத்துச் சொத்துக்களின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | மீளாய்வாண்டில் சபைக்கு நன்கொடையாக கிடைத்த 05 பிளாஸ்ரிக் தாங்கிகள் மற்றும் டெப் கணனி இயந்திரமொன்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது பெறுமதி மதிப்பபீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதாக | சபைக்கு கிடைக்கப் பெறும் அனைத்துச் சொத்துக்களின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

3.3 <u>செயற்பாட்டு செயற்திறனின்மை</u>

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையால் இறுதியாக 2012 ஆம் ஆண்டின் போது அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களாக இனங்காணப்பட்டிருந்த போதும் வீதவரி அறவீடு செய்யக்கூடிய பிரதேசங்களை விரிவாக்குவதற்கு கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் பின்னர் வீதவரி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை | அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை விரிவாக்குவதற்கு இந்த பிரதேசங்களை வரைபடமாக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக | அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு வீதவரி அறவீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | சபைக்குச் சொந்தமாக 150 கடைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதும் அக்கடை உரிமையாளர்களுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை. | கடை உரிமையாளர்களுடன் விரைவில் உடன்படிக்கை மேற்கொள்வதற்காக அவர்களுக்கு அறிவூட்டியுள்ளதாக | சபைக்குச் சொந்தமான ஆதனங்களை குத்தகைக்கு வழங்கும் குத்தகையாளர் களுடன் உடன்படிக்கை செய்யப்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைக்குக்குரிய கெப் லண்டியின் பதிவுச் சான்றிதழின் பிரகாரம் எஞ்சின் இலக்கம் 4M40UAC8154 ஆக இருந்த போதும் வாகனத்தில் உள்ள எஞ்சின் இலக்கம் 4M40AH8031 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. | இவ்வியந்தரத்தை பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக | சபைக்கு சொந்தமான சொத்துக்களை உயர் செயற்திறனுடன் பயன்பாட்டிற்கு எடுக்க வேண்டும் |
| (ஆ) | சபையால் பயன்படுத்தப்படுகின்ற 07 வாகனங்கள் சபைக்கு கிடைத்து 1 வருடம் முதல் 23 வருடங்கள் வரையான காலமொன்று கடந்திருந்த போதும் அவ்வாகனங்களின் சட்டரீதியான உரித்தினை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2 வாகனங்களின் பதிவுச் சான்றிதழ்கள் இல்லாமல் இருந்ததுடன் எஞ்சிய வாகனங்களை பிரதேச சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் சட்டரீதியான உரித்தினை கையேற்க வேண்டும் |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் 13 பதவிகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் 34 ஊழியர்கள் பற்றாக்குறை யொன்று காணப்பட்டதுடன் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இப் பதவயிணயினர் வெற்றிடங்கள் தொடர்பாக மாதாந்தம் உள்ளூராட்சிமன்ற திணைக்களத்திற்கு அறிவித்துள்ளதாக | பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்ப வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பிரதேச சபையின் சேவையிலிருந்து மரணித்த மற்றும் ஓய்வுபெற்ற 05 ஊழியர்களிடமிருந்தம் சேவையை விட்டுச்சென்ற மற்றும் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த 15 ஊழியர்களிடமிருந்தும் இடமாற்றம் பெற்றுச்சென்ற 05 ஊழியர்களிடமிருந்தும் முறையே அறவிடப்பட வேண்டிய ரூபா 244,487 தொகை ரூபா 451,702 மற்றும் ரூபா 57,587 ஆன கடன் மீதிகளை ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக அறவிடாமல் காணப்பட்டது. | 2024 ஆம் ஆண்டில் இந் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை கடன் மீதிகளை விரைவில் அறவீடு செய்தல் வேண்டும். |

## 4. <u>கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்</u>

### 4.1 <u>உள்ளக கணக்காய்வு</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான உள்ளக கணக்காய்வு வொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை | 2024 ஆம் ஆண்டின் போது உள்ளக கணக்காய்வு ஒன்றை மேற்கொள்வதாக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்ட போதும் பதவியணியினர் பற்றாக்குறை காரணமாக அவரை கடமைக்காக ஈடுபடுத்த வேண்டி இருந்தது எதிர்காலத்தில் இந்நிலைமையை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சபையின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**4.2** **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41 ஆம் பிரிவு மற்றும் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2019 ஜனவரி 12 ஆம் திகதிய டீஎம்ஏ/01-2019 ஆம் இலக்க உள்ளக கணக்காய்வு வழிகாட்டல் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்கள் நடத்தப்பட்டு இருக்கவில்லை. | 2023 ஆகஸ்ட் 25 ஆந் திகதி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டமொன்று நடாத்தப்பட்டதாக | வழிகாட்டல்கள் மற்றும் ஏனைய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.3** **பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டிற்காக பிரதேச சபையால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் ஆண்டின் உள்ளவாறான வருமானங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 08 வருமான விடயங்களில் 28 சதவீதம் முதல் 81 சதவீதம் வரையிலும் 07 செலவின விடயங்களில் 34 சதவீதம் முதல் 207 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | விலகலை குறைக்கும் வகையில் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வருடாந்த பாதீடு மிகவும் நடைமுறை ரீதியில் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அந்த்இலக்குகள் நிறைவேற்றப்பட வேண்டும் |

## 4.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ------------------------------------------------ | -------------------------------- | -------------------------- |
| ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக சபையால் அறிந்திருந்த போதும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்காக குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்காக குறிகாட்டிகள் இனங்காணப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்காக குறிகாட்டிகள் இனங்காணப்பட வேண்டும். |